Junkmail
04/05/22

A3

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் 1; 28PM

சென்னை-6

ந.மு.எண்.047457 / சி3 / இ1 / 2021 நாள்.19.4.2022

1442

முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம்
பெறப்பட்டது
05 MAY 2022
வேலூர் - 632 009

பொருள்: தமிழ்நாடு பள்ளக் கல்வி சார்நிலைப்பணி - ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனமாக 2012ம் ஆண்டில் பள்ளிக் க்ல்வித்துறையின் கீழ் உள்ள அரசு உயர் /மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலப்பாட பட்டதாரி ஆசிரியர்களாக நியமன ஆணை வழங்கப்பட்டவர்கள் - நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் நியமனத்தை முறையான நியமனமாக முறைப்படுத்தி ஆணை வழங்குதல் சார்பு.

பார்வை: 1)தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (ப.தொ) செயல்முறைகள் ந.க.எண்.92233/சி3/இ1/13 நாள்.2.12.2012
2)இராமநாதபுரம் முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.4938/ஆ5/2021 நாள்.19.8.2021

-0-

2012ம் ஆண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆங்கிலப் பாட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை-1ல் காணும் செயல்முறைகள் மூலம் வழங்கப்பட்ட நியமனங்கள் அனைத்தும் அவ்வாசிரியர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் முறையான நியமனமாக முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது. ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆசிரியர்களுக்கு தனியாக பணிவரன்முறை செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கலாகிறது.

இச்செயல்முறைகளின் நகல்களை தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள சார்ந்த ஆசிரியர்களுக்கு அனுப்பிவைப்பதோடு அவ்வாசிரியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளும்படி சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)

19/04/22

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலகள்
(மின்னஞ்சல் மூலமாக)

ந.க.எண். 1442/அ3/2022 நாள். 06.05.2022
(நகல்) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது
பெறுநர் அனைத்து அரசு உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.

மு.க.அ.
வேலூர்